Website-ல் வெளியிட அனுப்பவும்
2.3.18

//மிகவும் அவசரம்//

அனுப்புநர்

திரு. சி.அ. ராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

பெறுநர்

1. முதன்மை கல்வி அலுவலர், வேலூர்
2. மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர், வேலூர்
3. மாவட்ட கல்வி அலுவலர், வேலூர் / திருப்பத்தூர்
4. மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், வேலூர்
5. உதவித்தொடக்கக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
6. மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் ஆய்வாளர், திருவண்ணாமலை

**ந.க.எண்: என்.5/4714/2018 நாள்: 26.02.2018**

அய்யா,

பொருள்: சிறுபான்மையினர் நலம் - பள்ளி படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம் 2018-2019 ஆம் ஆண்டிற்கு நடைமுறைப்படுத்தல் - கல்வி நிலையங்களின் விவரங்களை மைய அரசின் இணையதளத்தில் பதிவு செய்ய அறிவுரை வழங்குதல் மற்றும் பத்திரிக்கை செய்தி வெளியிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களின் கடித எண்.பி1/1143/2017, நாள்: 15.02.2018.
2. சென்னை சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களின் கடித எண்.அ4/1689/2016 நாள்: 21.02.2018.
3. இவ்வலுவலக பத்திரிக்கை செய்தி

*****

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் 1 முதல் 12 வகுப்பு, வாழ்க்கை தொழிற்கல்வி (Vocational), ஐடிஐ, ஐடிசி, பாலிடெக்னிக், பட்டயப்படிப்புகள், இளங்கலை (ம) முதுகலை பட்டப்படிப்புகள், பொறியியல் மற்றும் மருத்துவம், எம்பில், ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றை பயிலும் கிருத்துவர் / இஸ்லாமியர் / புத்த மதத்தினர் / சீக்கியர் / ஜைன் மற்றும் பார்சி மதத்தைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு பள்ளி படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் தேசிய கல்வி உதவித்தொகை இணையம் (National Scholarship Portal) www.scholarships.gov.in வாயிலாக மத்திய அரசின் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இக்கல்வி உதவித்தொகை திட்டத்தில் பயன்பெற அனைத்து கல்வி நிலையங்களும் மேற்காணும் இணைய தளத்தில் பதிவு செய்திருப்பது அவசியமாகும்.

***எனவே, இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களும் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் பதிவு செய்துள்ளதையும், பயனீட்டாளர் குறியீடு (User-ID) பெறப்பட்டுள்ளதையும் உறுதி செய்து கொள்ள தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.***

மேலும் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றி இதுவரை தேசிய கல்வி உதவித்தொகைக்கான இணையதளத்தில் பதிவு செய்யாத கல்வி நிலையங்கள் தங்கள் பள்ளி / கல்லூரிகளை இணையதளத்தில் இணைத்தல் மற்றும் AISHE / UDISE எண் மற்றும் கல்வி நிலையத்தின் பெயர் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பின் அவ்விவரத்தினை உரிய ஆவணங்களுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்புகொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. இணையதளத்தில் கல்வி நிலையத்தினை பதிவு செய்வது தொடர்பாக கல்வி நிலைய முதல்வர் / தலைமையாசிரியர் / டீன் கோரிக்கை கடிதம், (சுய ஒப்பமிட்டது), தலைமையாசிரியர் / முதல்வர் / டீன் பெயர், மொபைல் எண் (அவசியம்), AISHE / UDISE எண், கல்வி நிலையத்தின் முழு முகவரி ஆகிய விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து தலைமையாசிரியர் / முதல்வரின் கையொப்பத்துடன் பள்ளி / கல்லூரிக்கான AISHE / UDISE Code -க்கான சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.
2. கல்வி நிலையங்களை தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (www.scholarships.gov.in) பதிவு செய்வதற்கான கடைசி தேதி 31.03.2018 ஆகும் எனவும், 31.03.2018 வரை இணையதளத்தில் பதிவு செய்துள்ள கல்வி நிலையங்கள் மட்டுமே 2018-19 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் பயன்பெற இயலும்.
3. மேலும் விவரங்களுக்கு சிறுபான்மையினர் நல அலுவலக தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்ள தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

*தொலைபேசி எண் - 0416-2254012 மின்னஞ்சல் முகவரி - dbcwo.tnvlr@nic.in*

வேலூர் மாவட்டத்தில் உள்ள கல்வி நிலையங்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறையினை பின்பற்றி தங்கள் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ / மாணவியர்கள் 2018-2019 ஆம் ஆண்டிற்கான சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்து பயன்பெற உரிய காலத்தில் தங்கள் கல்வி நிலையங்களின் விவரங்களை தேசிய கல்வி உதவித்தொகைக்கான இணையதளத்தில் (National Scholarship Portal) இணைக்கக் கோரி தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு தகவல் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் தங்கள் இணையதளத்தில் இதுகுறித்த தகவல்களை அனைத்து பள்ளிகள் / கல்லூரிகள் அறியும் வண்ணம் செய்தி வெளியிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: படிவம்

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
வேலூர்

நகல்: இயக்குநர், சிறுபான்மையினர் நலத்துறை,
807 அண்ணா சாலை (5வது தளம்), சென்னை – 2.

## படிவம்

**சிறுபான்மையின மாணவ / மாணவிகளுக்கு ஆன்லைன்மூலம் கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு கல்வி நிறுவனங்களை பதிவு செய்தல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | NAME OF THE SCHOOL / EDUCATIONAL INSTITUTION | : | |
| 2. | **DISE NO./AISHE CODE** (*) | : | |
| 3. | FULL POSTAL ADDRESS OF THE SCHOOL / INSTITUTION | : | |
| 4. | INSTITUTE PIN CODE | : | |
| 5. | HEADMASTER / HEADMISTRESS / PRINCIPAL NAME | : | |
| 6. | HEADMASTER / HEADMISTRESS / PRINCIPAL MOBILE NUMBER | : | |
| 7. | SCHOLARSHIP RESPONSIBILITY STAFF NAME | : | |
| 8. | SCHOLARSHIP RESPONSIBILITY STAFF MOBILE NUMBER | : | |
| 9. | E-MAIL ID OF THE INSTITUTION | : | |
| 10. | TELEPHONE NO. OF THE INSTITUTION | : | |
| 11. | OWNERSHIP (GOVT / GOVT. AIDED / PRIVATE RECOGNISED BY GOVT) | : | |

(*) - School Report Card (or) DISE Code Order Copy / AISHE Code Order Copy

Signature :

Name :

Designation :

School seal :